ஆணையாளர், பூவிருந்தவல்லி ஊராட்சி ஒன்றியம் அவர்களின் நடவடிக்கைகள்
முன்னிலை: திரு.ர.முரளி

ப.மு.எண்:3059/2025/அ3 நாள்:15.10.2025

பொருள்: மனை உட்பிரிவு - திட்ட அனுமதி - பூவிருந்தவல்லி ஊராட்சி ஒன்றியம் - பாணவேடுதோட்டம் ஊராட்சி புல எண்:25/3A2, Plot No: A,B,C & D,Patta No:234 4- மனைகளாக உட்பிரிவு செய்து உத்திரவிடல் - சார்ந்து

பார்வை: Empanallment Engineer பரிந்துரை நாள்.23.09.2025.

--*-*-*

உத்தரவு:

பார்வையில் காணும் Empanallment Engineer-ன் பரிந்துரைப்படி, **M/S.Chennai Affordable Venture Llp.Rep By.Mr.S.Ramkumar** அவர்களுக்கு **பாணவேடுதோட்டம்** ஊராட்சி புல எண்: 25/3A2, , **Plot No: A,B,C & D Patta No:234 , 6917.89 சதுர அடி** பரப்பளவுக் கொண்ட மனையை Plot No:**A-1960.33** சதுர அடி, Plot No:**B -1849.79** சதுர அடி, Plot No:**C - 1750.11** சதுர அடி மற்றும் Plot No:**D -1357.66** சதுர அடி என உட்பிரிவு செய்து உத்தரவிடப்படுகிறது. மேற்காணும் உட்பிரிவுக்காக அளிக்கப்பட்ட ஆவணங்களில் குறைகள் கண்டறியப்பட்டாலோ அல்லது விதி மீறல்கள் இருப்பின் இவ்வுத்தரவு தானாக இரத்தாகிவிடும் என்ற நிபந்தனை பேரில் இவ்வுத்தரவு வழங்கப்படுகிறது.

நிபந்தனைகள்

1. வரைபடத்தில் உள்ளவாறு மனைஉட்பிரிவு அமைப்பு இருக்க வேண்டும்.
2. இவ்வாணையினை திருத்தம் செய்யவோ, அல்லது நீக்கம் செய்யவோ ஆணையருக்கு முழு அதிகாரம் உண்டு.
3. வசூல் செய்யப்பட்ட அனுமதி கட்டணத்தில் தணிக்கை துறையின் கீழ் ஏதேனும் மீதம் கட்டணம் செலுத்த தெரிவித்தால் உடன் செலுத்த மனுதாரர் கடமைப்பட்டவர் ஆவார்.
4. இரு சாலைகள் சந்திக்கும் இடத்தில் அமையும் மனைகளின் மூலைகள் அங்கீகரிக்கபட்ட வரைபடத்தில் கண்டுள்ள திருபத்தோடு (S- play) அமைக்கப்பட வேண்டும்.
5. மனைப்பிரிவில் பள்ளமாக உள்ள பகுதியை தெரு மட்டத்திற்கு உயர்த்தப்பட வேண்டும்.
6. சமர்பித்துள்ள நில உரிமை ஆவணங்களின் படி நில உரிமம் குறித்து பரிசீலிக்கப்படுகிறது. எனவே உண்மையில் நில உரிமம் இல்லாத இடத்திற்கு மனைப்பிரிவு அங்கீகரிக்கப்பட்ட காரணத்திற்கு எந்த உரிமையும் கொண்டாட முடியாது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு:

1. திட்ட அனுமதி ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபடங்கள்
2. திட்ட அனுமதி பர்மிட் எண்:D35022 நாள்: 15.10.2025

15/10/25

ஆணையாளர்
பூவிருந்தவல்லி ஊராட்சி ஒன்றியம்

பெறுநர்:-
M/S.Chennai Affordable Venture Llp.
Rep By.Mr.S.Ramkumar,
55/74, 1st Avanue,Indira Nagar,
Adayar, Chennai - 20.

15.10.2025

நகல்:-

1. உறுப்பினர் செயலாளர் சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமம், அவர்களுக்கு பணிந்தனுப்பப்படுகிறது.
2. தனி அலுவலர் / வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ), பாணவேடுதோட்டம் ஊராட்சி